இந்தத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 47, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

47—

தரைப் பாலம்

***37287—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை வனத் துறை பகுதியில் சின்னாறும், பாம்பாறும் இணையும் கூட்டாறு என்னும் இடத்தில் மலைவாழ் மக்கள் பயன்படுத்த தரைமட்டப் பாலம் கட்ட வனத் துறை உரிய ஒப்புதல் வழங்குமா?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உடுமலைப்பேட்டை வனத் துறை பகுதியில் சின்னாறும், பாம்பாறும் இணையும் கூட்டாறு பகுதி வன உயிரின சரணாலயத்திற்கு உட்பட்ட பகுதியாகும். உச்ச நீதிமன்ற வழக்கு எண் 202/95 மற்றும் 337/95 ஆகிய வழக்குகளில் வழங்கப்பட்ட இடைக்காலத் தீர்ப்புகளின்படி, வன உயிரின உய்விடம் மற்றும் தேசிய பூங்கா ஆகியவற்றை வனமல்லாத மாற்று பணிகளுக்குப் பயன்படுத்துவது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. எனவே, மேலே குறிப்பிடப்பட்ட பாலம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

முற்பகல் 10-45

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கிணங்க உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உடுமலைப்பேட்டை—சின்னாறு சாலையில் கிலோ மீட்டர் 28/2-லிருந்து சுமார் 7.5 கிலோமீட்டர் தூரத்தில் தளிஞ்சி என்ற மலைவாழ் கிராமம் உள்ளது. இந்தக் கிராமத்தில் 130 குடும்பங்கள்

உள்ளன. இவர்கள் *900* ஏக்கர் நிலப்பரப்பில் நல்ல விவசாயம் செய்து வருகிறார்கள். இந்த நிலப்பரப்பிற்கு அடுத்தாற்போல் மஞ்சப்பட்டி கிராமம் உள்ளது. இந்தக் கிராமம் திண்டுக்கல் மாவட்டம் பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்ததாகும். இந்தக் கிராமத்தில் *120* குடும்பங்கள் உள்ளன. இவர்கள் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்து வருகிறார்கள். இந்த இரண்டு மலைவாழ் கிராமங்களுக்கும் விவசாய இடுபொருட்களையும், விவசாய விளைபொருட்களையும் மற்றும் தங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் தலைச் சுமையாகத்தான் கொண்டு செல்கிறார்கள். மேலும், இந்தப் பாதையில் கிலோ மீட்டர் *2/6* சின்னாறும், பாம்பாறும் இணையும் இடமாக உள்ளது. இதைக் கூட்டாறு என்று அழைக்கிறார்கள். இந்த இடத்தைக் கடந்துதான் கிராம மக்கள் செல்ல வேண்டியுள்ளது. மழைக் காலங்களில் இந்த ஆற்றைக் கடந்து செல்ல முடியாத நிலை உள்ளது. எனவே, இந்த இடத்தில் தரைமட்டப் பாலம் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களது அரசு, வனத் துறை ஒப்புதல் பெற்றுத் தர முன்வருமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோர்ட்டிலே இருப்பதாகக் கூறினார்கள், இருந்தாலும், அதைப் பரிசீலித்து, அந்த மலைவாழ் மக்களுடைய நிலையைக் கருத்திலே எடுத்து, அந்தப் பாலம் கட்டுவதற்கு நம்முடைய அரசு ஒப்புதல் வழங்குவதற்கு முன்வருமா என்பதை மாண்புமிகு அமைச்சரிடம் தங்கள் மூலமாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதி வன உயிரின சரணாலயப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. சரணாலய பகுதி அல்லது தேசியப் பூங்கா என அறிவிக்கப்பட்ட வனப் பகுதியில் வனமற்ற பிற பணிகளுக்கு வன நிலத்தை வழங்க வேண்டி எந்தவிதமான பிரேரணைகளும் மைய அரசின் அனுமதி கோரி, உச்சநீதிமன்ற முன் அனுமதியின்றி அனுப்பி வைக்க வேண்டாம் என மைய அரசு தன் *4-5-2001* நாளிட்ட கடிதத்தில் மாநில அரசுகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளது. எனவே, தரைப்பாலம் கட்டுவது அவசியம் எனக் கருதப்பட்டால் உச்சநீதிமன்ற ஆணை பெறப்பட்ட பின்னரே மைய அரசின் ஒப்புதலுடன் தரைப்பாலம் கட்ட இயலும் என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2003 நவம்பர் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியானது மலைவாழ் மக்கள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி. அங்கு மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைத்து, மிக விழிப்போடு அந்தப் பெண்கள் ஈடுபட்டுள்ளார்கள். அவர்கள் அடிக்கொரு முறை அந்த நகரத்திற்கு வந்து செல்ல வேண்டியுள்ளது. அங்கு வனத் துறை அதிகாரிகள் செல்வதற்கு ஏற்கெனவே வனத் துறை மூலமாக பாதை உள்ளது. கருணை அடிப்படையிலே நம்முடைய அரசு உரிய நடவடிக்கை எடுத்து அந்த ஒப்புதல் பெற்றுத்தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் தங்கள் மூலமாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய முன் அனுமதி பெற வேண்டும். அதன்மூலமாக மைய அரசுக்கு நாம் பரிந்துரை செய்தால், மைய அரசினுடைய அனுமதியுடன் இந்தப் பாலம் கட்டித்தர, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 48, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

48—

கான்கிரீட் வீடுகள்

***14989—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள ஏழை மக்கள் தங்களது குடிசைகளை மாற்றி தீப்பிடிக்காத பாதுகாப்பான கான்கிரீட் வீடு கட்டிக்கொள்ள ரூ.10,000/- மானியத்துடன் ரூ.20,000/- கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?